[8th September 1959

SRI V. K. KOTHANDARAMAN : செகண்டரி கிரேடு ட்ரெயினிங் முடித்த ஆசிரியர்கள் வேலையில்லாத காரணத்தால் அவர்களுக்கு ஹையர் கிரேடு டீச்சர் வேலை கொடுத்து அவர்கள் வேலை செய்தும் கூட செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நூற்றுக் கணக்கில் வேலையில்லாமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதைப் போக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டத்தைப் பற்றி இப்பொழுது சொன்னேன். 1,200 புதிய ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ள இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரில் சில சம்பளம் வாங்கும் பள்ளிக்கூடங்களில் இருந்து அநேக ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அவர்களுக்குத் திரும்பவும் வேலை வாங்கிக் கொடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

I am sorry this is not under employment but it is under payment.

SRI M. D. THIAGARAJA PILLAI : நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று ஜில்லா தோறும் இருக்கிறபடியால் அவர்களுக்கு எந்த முறையை அனுசரித்து வேலை கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யார் யார் வேலைக்குத் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை இருக்கும் இடத்தில் கொடுக்கப்படுகிறது.

SRI A. A. RASHEED ; Is there any proposal to reduce the teacher pupil ratio in order to absorb more teachers in the schools ?

THE HON. SRI C. SUBRAMANIAM : You will have to increase the budgetary position.

SRI A. VEDARATHNAM : ஸார், இப்படி பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிற, ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை உத்தேசமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. சில ஜில்லாக்களில் அதிகப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் இருக்கும் காரணத்தினாலும் மற்ற ஜில்லாக்களில் போதுமான அளவு பயிற்சிப் பள்ளிகள் இல்லாத காரணத்தினாலும் சில ஜில்லாக்களில் அதிக ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இன்னும் சில ஜில்லாக்களில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. இது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

SRI T. IRUSAPPAN : மலைமேல் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதியும், அவர்களுக்கு அதிகச் சம்பளமும் கொடுப்பது பற்றியும் உத்தேசம் அண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிக் கேள்வி போடவேண்டும்.

Afforestation

* 193 *Q.*—MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் சபையில் இல்லாததால், கேள்வியும் பதிலும் விவாத வெளியீட்டில் பிரசுரிக்கப்படும்.

SRI N. R. THIAGARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்தில் காடு வளர்க்க தகுதியான இடங்கள் சர்வே வைக்கப்பட்டுள்ளனவா ?

THE HON. SRI M. B HAKTAVATSALAM : Yes, Sir.